பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

மலர்: 6 பிரமோதூத ஹூ பங்குனி மீ 08 உ. வெள்ளிக்கிழமை [22-03-1991] UTHAYAN-A Lively National Tamil Daily இதழ்: 115

# சிலாவத்துறையில் தொடர்ந்து நேற்றிரவு வரை கடும் மோதல்!

## அகோர வான் தாக்குதலின் மத்தியிலும் விடுதலைப் புலிகள் சளைக்காது சமர்

யாழ்ப்பாணம், மார்ச் 22

மன்னார் மாவட்டம் சிலாவத்துறையிலும், கொக்குப்படையானிலும் உள்ள இராணுவ முகாம்கள் மீது விடுதலைப் புலிகள் கடந்த செவ்வாய் இரவு ஆரம்பித்த உக்கிர தாக்குதல் நேற்றிரவு வரை தொடர்ந்து மூன்றாவது நாளாக நடைபெற்றுக் கொண்டிருந்ததாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இப்பகுதிகளில் இடம்பெற்றுவரும் அகோர வான் தாக்குதல்களுக்கு மத்தியிலும் விடுதலைப் புலிகள் சளைக்காது சமர் புரிந்து வருகின்றனர்-

இராணுவத்திற்கு உதவியாக நேற்றுப் பகல் நான்கு பொம்மர்கள், மூன்று அவ்ரோக்கள், 4 ஹெலிக்கொப்டர்கள் ஆகியன தொடர்ச்சியாக வான் தாக்குதல்களை நடத்திய வண்ணம் இருந்தன.

தாக்குதல்களுக்கு இலக்காகி நிலைகுலைந்து போயிருக்கும் இராணுவத்தினரைக் காப்பாற்றும் நோக்கத்துடன் நேற்று முன்தினமிரவு சுமார் பத்து வரையான பீரங்கிப் படகுகள் கடலிலிருந்து முகாமின் கரைப் பகுதிகளை அண்மித்து வர முயன்றதாகவும்—

விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களை அடுத்து படகுகள் பின்வாங்கிச் சென்றதாகவும் ஒரு செய்தி தெரிவித்தது.

அப்பகுதியில் கடும் பீரங்கித் தாக்குதல்களும் இடம் பெற்றன.

இரு முகாம்கள் மீதான

[3 ஆம் பக்கம் பார்க்க]

## களப்பலியான வேங்கைகள்

யாழ்ப்பாணம், மார்ச் 22

சிலாவத்துறை, கொக்குப்படையான் இராணுவ முகாம்கள் மீது நடத்தப்பட்டு வரும் தாக்குதல்களில் வீரமரணமடைந்த 17 போராளிகளின் பெயர், விவரங்கள் நேற்றிரவு கிடைத்தன. விவரம் வருமாறு:-

- ★ ரஞ்சன் [செல்வநாயகம் தயாபரன் - பருத்தித்துறை]
- ★ சுந்தர் [செபமாலை மரியபேந்திரன் -கந்தர்மடம், யாழ்ப்பாணம்.]
- ★ தர்ஷன் [புலவர்] [யோகசாமி செந்தூரன்-வல்வெட்டித்துறை]
- ★ குட்டி [செல்வநாயகம் செல்வகுமார்-யாழ்ப்பாணம்]
- ★ சோமன் [விநாயகமூர்த்தி இராஜேந்திரன்-சாவகச்சேரி]
- ★ சயந்தன் செல்வராசா யோகேஸ்வரன்-மானிப்பாய்)
- ★ அன்ரனி [துரைச்சாமி அகிலன் - யாழ்ப்பாணம்]
- ★ லோகன் [சிவப்பிரகாசம் சிவலோகநாதன் - மிருசுவில்]
- ★ ரஞ்சித் [கதிர்காமு குணபாலசிங்கம் - பளை]
- ★ நாதன் [தியாகராஜா சிவானந்தன் - இத்தாவில், பளை]
- ★ அம்பி [நாகலிங்கம்

[3-ஆம் பக்கம் பார்க்க]

## வானில் சிதறிய விமானம்!

நூற்றுக்கும் அதிகமான செனகல் நாட்டு இராணுவ வீரர்களை ஏற்றிச் சென்ற சவூதி போக்குவரத்து விமானம் ஒன்று குவைத் எல்லையில் நொருங்கி விழுந்தது.

இந்தச் சம்பவத்தில் 92 இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர் என்று நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது [ஒ-எ]

## வேங்கைகளுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், மார்ச் 22

மன்னார், சிலாவத்துறையில் கடந்த மூன்று நாட்களில் களப்பலியான வீரவேங்கைகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நேற்று குடாநாடு எங்கும் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

வீதிகளில் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன: சோக கீதமும் இசைக்கப்பட்டது.

குடாநாட்டில் அனேக இடங்களில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

களப்பலியான வேங்கைகள் சிலரின் புகழுடம்புகள் இன்று காலை வலிகாமத்தில் சங்கானை சந்தைப் பகுதியிலும்—

வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளிலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும்- [ஒ-5-117]

## வவுனியாவிலும் மோதல்

யாழ்ப்பாணம், மார்ச் 22

வவுனியா நகரில் காமினி வித்தியாலய முகாமில் இருந்து நேற்று நண்பகலுக்கு பின்னர் மன்னார் நோக்கிப் புறப்பட்ட இராணுவத்தினரை நெலுக்குளம் பகுதியில் வழிமறித்து விடுதலைப் புலிகள் தாக்குதலை நடத்தினர்:

பவள் கவச வாகனங்கள் சகிதம் நூற்றுக்கணக்கான படையினர் ஷெல் தாக்குதல்களை நடத்திக்கொண்டு மன்னார் நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தனர். அப்போதே அவர்கள் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டது.

சுமார் 2 மணி நேரம் நடந்த மோதலில் இராணுவத்துக்கு இழப்புகள் ஏற்பட்டதாகத் தெரியவருகிறது.

உயிரிழந்த அல்லது காயமடைந்த சிப்பாய்கள் அடுத்தடுத்து கவச வாகனங்களிலும் டிராக்குகளிலும் ஏற்பட்டனர். பின்னர் படையினர் அங்கிருந்து பின்வாங்கி வவுனியா நகரை மீண்டும் சென்றடைந்தனர் என்று [illegible]டது. [ஒ-15]

## முச்சந்தி முரளி



தோழிறவையள் பிறகு சார்க்குப் போக்குச் [illegible] [illegible] அழைக்கினம் போலை ......!

## 'முகமூடி'களின் உதவியுடன் உவர்மலையில் 9 பேர் கைது

கடந்த திங்களன்று திருகோணமலை உவர்மலைப் பகுதியைச் சுற்றிவளைத்த ஸ்ரீலங்காப் படையினர் முகமூடிகளின் உதவியுடன் அங்கிருந்த ஒன்பது தமிழர்களைக் கைது செய்து கொண்டு சென்றனர். இவர்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்து இதுவரை தெரிய வரவில்லை.

இதேவேளை அடுத்த நாள்-செவ்வாய்க்கிழமையன்று - செல்வநாயகபுரம் கிராமப் பகுதி ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டது. [உ]

## மக்கள் வங்கிக்கு வடக்கில் ரூபா 10 கோடி சேதம்!

கடந்த ஜூன் மாதம் முதல் இடம்பெற்று வரும் இராணுவ நடவடிக்கையால் வடக்கிலுள்ள மக்கள் வங்கிக் கிளைகளின்—10 கோடிக்கு மேலான சொத்துக்கள்— நாசமாகியுள்ளன.

மக்கள் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் திரு. எஸ். அருளானந்தம் உதயனுக்கு இத்தகவலைத் தெரிவித்தார்.

''வடக்கிலுள்ள 16 வங்கிக் கிளைகளின் கட்டடங்கள், தளபாடங்கள், முக்கிய ஆவணங்கள் சேதமடைந்துள்ளன. சில வங்கிக் கிளைகளில் பணமும் காணாமல் அல்லது அழிந்துபோய் விட்டது.

ஊர்காவற்றுறை, முல்லைத்தீவு கிளைகளின் சேதங்கள் இன்னும் மதிப்பிடப்படவில்லை. அப்பகுதிகளில் இராணுவம் நிலைகொண்டுள்ளதால், சேதம் குறித்து அறிய முடியாமல் உள்ளது'' — இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். [ஒ-3]

## ரூ. 2 கோடி அடகு நகைக்கு நஷ்டஈடு கிடைக்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 22

வடபகுதி மக்கள் வங்கிகளில் அடகு வைக்கப்பட்டு ஜூன் மாதத்திற்குப் பின்னர் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின்போது காணாமற் போன நகைகளின் உரிமையாளர்களுக்கு நஷ்டஈடு வழங்க வங்கி நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அடகு மீட்பதற்காக பணம் செலுத்தியோருக்கு, மீளளிப்பதற்காக கொண்டு வரப்பட்ட சுமார் இரண்டு கோடி ரூபா நகை இவ்வாறு காணாமற் போயிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## 43 கப்பல் தொழிலாளரே காணாமற் போயினர்!

பூநகரி, மார்ச் 22

கடந்த செவ்வாய்க்கிழமை வலைப்பாடு கடற்பகுதியில் காணாமற்போனதாகக் கூறப்படும் 43 பேரும் வலைப்பாடு இறங்குதுறையில் கப்பலில் இருந்து பொருள்களை இறக்கிய தொழிலாளர்கள் ஆவர்.

இந்த 43 பேரும் வலைப்பாடு, இரணைதீவு கிராமங்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரிய வருகிறது.

கப்பலில் இருந்து பொருள்களை இறக்கிவிட்டு தத்தமது கிராமங்களுக்கு இரவு 9 மணியளவில் படகில் திரும்பிக் கொண்டிருந்தபோதே இவர்கள் காணாமற் போயினர்.

இவர்கள் படகில் புறப்பட்ட சொற்ப நேரத்தில் கடற்பகுதியில் வேட்டுச் சத்தங்கள் கேட்டதாக செய்தி வெளியாகி இருந்தது தெரிந்ததே.

இதேவேளை —

படகில் சென்றவர்களை

[3 ஆம் பக்கம் பார்க்க]

## தேர்தலை அவதானிக்க சார்க் குழு வருமாம்

கொழும்பு, மார்ச் 22

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களை அவதானிக்க அவதானிப்புக் குழு ஒன்றை அனுப்பி வைக்கும்படி இலங்கை அரசு சார்க் நாடுகளின் தலைமைச் செயலகத்தைக் கேட்டுள்ளது.

ஜனாதிபதி பிரேமதாஸாவின் பணிப்பின் பேரில் வெளியுறவு அமைச்சு, நேபாளத்தில் உள்ள சார்க் தலைமைச் செயலகத்துடன் இது குறித்து தொடர்பு கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### வாங்கலாம் விற்கலாம்

பழைய புத்தகங்கள், கொப்பி, பேப்பர், போத்தல், பித்தளை, செம்பு, இமெந்து, கோழித்தீன், வெற்றுப்பைகள் வாங்கப்படும். விற்கப்படும். சேனாதிராசா Second Hand Book House 57, ஸ்ரான்லி றோட், இலங்கை வங்கி, முரசொலிக்கு முன் லேன். யாழ்ப்பாணம். [16045]

### தேவை

இறைச்சிக் கோழிகள் தேவை நல்ல விலை கொடுக்கப்படும். தொடர்பு: நல்லூர் வீடியோசென்ரர் 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். [16153]

பாவித்த சம்போ, ஓடிக்கலோன், Gum (கம்) Vicks போத்தல், பவுடர் டப்பா, போல்ப்பொயின்ட் பேனா சனிக்கிழமைகளில் மட்டும் காலை 9 மணி முதல் 12 மணி வரை வாங்கப்படும். S. சத்தியன் 55, மணிக்கூண்டு வீதி, கொழும்பு ஸ்ரூடியோ பின்புறம், யாழ்ப்பாணம். [இ-5867]

### புலமைப் பரிசில் பரீட்சை

மாரிச் 30 புலமைப் பரிசில் பரீட்சையை முன்னிட்டு மதிரிப் பரீட்சை 23 - 03 - 91 சனிக்கிழமை மு. ப. 8-00 மு. ப. 10-30/ பி. ப. 1-00 மணி நேரங்களில் நடைபெறும். பதிவு செய்யவும், வெளி மாணவர்களும் தோற்றலாம். ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரை சகல பாடங்களும் புலமைப் பரிசில் மாதிரி வகுப்புகளும் தூர இடங்களிலுள்ள மாணவர்களுக்கு Week-end வகுப்புகளும் நடைபெறுகின்றன. புதியகல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [16162]

### கடை றாக்கைகள்

பாவித்த கடை றாக்கைகள் தேவை. வைத்திருப்போர் எம்மை உடனடியாக தொடர்பு கொள்ளவும். யாழ். மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. [சி-5871]

### தவறிவிட்டது

16 - 3 - 91 அன்று புளியங்குளத்திற்கும், ஓமந்தைக்கும் இடையில் எனது பிரயாணப்பை தவறிவிட்டது அதில் தேசிய அடையாள அட்டை, பாஸ்போர்ட், வங்கிப் புத்தகம் (இல. 4653 காசோலை என்பனவும் அடங்கியுள்ளன கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். ச. கனகலட்சுமி இல. 337/7 தருமபுரம். [16161]

### மணமகள் தேவை

யாழ். இந்து சொந்தமாக வியாபாரம் செய்யும் மணமகனுக்கு 31 வயது நிரம்பிய, நல்ல தோற்றமுள்ளவருக்கு ரோகினி நட்சத்திரம் கிரககபாவம் குறைந்த, படிப்பும், அழகுமுள்ள மணமகள் தேவை சீதனம் முக்கியமல்ல முழு விவரத்துடன் தொடர்பு:- ABCDE 328, நாவலர் றோட், ஆனைப்பந்தி. [16159]

### வரலாறு ஆண்டு - 10

வரலாறு குறிப்புகள் ஆண்டு - 10 விற்பனையாகிறது முழுப் பாடத்திற்கமைய உள்ளது. எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும் ஆக்கம்: நா மயில்வாகனம் பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம் [16172]

### சிக்மா பம்ஸ்

உங்கள் நீர் இறைக்கும் இயந்திரங்களை அதி விரைவில் திருத்தி புனரமைத்துக் கொள்ளவும், உதிரிப் பாகங்கள் வாங்கவும் நாடுங்கள். யுனைட்டட் அக்றோ என்ஜினியரிங் 274/1, ஆஸ்பத்திரி வீதி (பெரியாஸ்பத்திரி முன்பாக) யாழ்ப்பாணம். [சி 4807]

### "சக்தி சரவணா"

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காணத்தக்க மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். "சக்தி சரவணா" 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (யாழ்ப்பாண இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக) தினசரி பகல் 9 மணி தொடக்கம் 3 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. [16179]

## முக்கிய அறிவித்தல்

ஆர் வி. ஜி பீடி பெயரில் போலி பீடிகள் விற்பனை செய்யப்படுவதாக அறிய வந்துள்ளோம். போலி ஆர். வி. ஜி பீடிகள் விலையிலும், தரத்திலும் குறைந்தவை என்பதை பாவனையாளர் கவனத்திற்கு அறியத்தருகிறோம்.

அசல் ஆர். வி. ஜி பீடிகள் எமது ஸ்தாபன வாகனங்கள் மூலமே விற்பனை செய்யப்படுகின்றன.

குறைந்த விலையில் விற்பனையாகும் போலி ஆர். வி. ஜி. பீடிகளை வாங்கி ஏமாறாதீர்கள்.

போலி ஆர். வி. ஜி. பீடி விற்பனையாளர் பற்றிய தகவல்கள் வரவேற்கப்படும்.

**ஆர். வி. ஜி நிர்வாகம்**
58, குறுக்குத் தெரு
நல்லூர், யாழ்ப்பாணம். [16167]

## ஆசிரியர்களுக்கும் பட்டதாரிகளுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

# S. L. E. A. S.

(இலங்கைக் கல்வி நிருவாக சேவை Open - Ltd.)
III ஆம் தரத்திற்கு
நடைபெறவிருக்கும் போட்டிப் பரீட்சைக்கான

### விசேட பயிற்சி வகுப்புகள்

(பல தனித்துவம் வாய்ந்த விரிவுரையாளர்களின் இணைந்த சேவை)

ஆரம்பம்: 23 - 03 - 1991 [10 a m.]

பாடநெறி: 1. கிரகித்தல், 2. நுண்ணறிவுத்தேர்வு
★ 3. கல்வி நிர்வாகம் பற்றிய நிகழ்வுக் கற்கை.

தகைமைகள்:

OPEN- 22 — 30 வயதிற்குட்பட்ட பட்டதாரிகள் யாவரும் விண்ணப்பிக்கலாம்.

LTD.- (i) 5 வருடம் கற்பித்தல் அனுபவம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களும. ஆசிரிய பயிற்சி பெற்றோரும், அல்லது
(ii) ஆசிரியப் பயிற்சிச் சான்றிதழ் பெற்ற பட்டதாரி ஆசிரியர் அல்லது
(iii) 10 வருடச் சேவையாற்றிய பயிற்சிபெற்ற ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம். வயதெல்லை இல்லை)

**விண்ணப்ப முடிவுத் திகதி: 25 - 03 1991**

பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களையும், விவரத்திரட்டினையும் எம்மிடம் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

★ விரிவுரைகள் சனி, ஞாயிறு, விடுமுறை தினங்களில்
★ இலவச பாடக்குறிப்புகள்
★ தொடர்ச்சியாக 3 மணித்தியாலங்கள்.
★ கட்டணம் ரூபா 280.00 (முழுப்பயிற்சிக்கும்)

விவரங்களுக்கு:
நேரில் மு. ப. 9-00 —12 மணி வரை

**ASTAN INSTITUTE**
101/10, STANLEY ROAD, JAFFNA.
(மக்கள் வங்கி அருகாமையில்) [சி-5867]

### 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி
**ப. இராமநாதன்**
(ஓய்வு பெற்ற அதிபர், இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்)
மண்ணில்: 24 - 06 - 1926
விண்ணில்: 05 - 04 - 1987
திதி: 22 - 03 - 1991
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
126/4, அரசடி வீதி, யாழ்ப்பாணம். (3887)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 27-02-1916
மறைவு: 20-02 1991


### திருமதி கயிலாசபிள்ளை தங்கரத்தினம்

எங்கள் அன்புத் தெய்வமே! எம்மையெல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு நீங்கள் சென்று திங்கள் ஒன்று சென்றதம்மா. உங்கள் நினைவுகள் என்றும் எம் உள்ளத்தில் நீங்காது நிலைத்திருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள்,
சகோதரர்கள், உறவினர்கள்,
"யோகஸ்தி",
மானிப்பாய் தெற்கு. [15923]

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வன்
### பாலசுப்பிரமணியம் முகிலன்
(சுக்ளா)
(யாழ் மத்திய கல்லூரி மாணவன்)

தமிழீழ மண்ணில்: 20 - 03 - 1973
தமிழீழ மீட்பில்: 06 02 - 1991

பூவாய் மலர்மனம்
பூ கம்பமானது
நாவல் அடங்க
நடையாய் களன்றான்.
மண்விடட நெருப்பை
மடக்கிடும் போரில்
விண்ணிடைப் புகுந்தான்
மிகுமழ முகிலன்.
கண்மழை பொழிகையில்
கனமுகில் குடும்பம்
விண்மழை பொழியும்
மேகம் நீ முகிலா.
விரையும் ஈழ
விடுதலைக் குளிர்ச்சியை
கரையும் முகிலன் நீ
கைகளில் தருவாய்
பொய்ம்மை அணுகாப்
புனிதப் புதல்வா
தெய்வமாய்க் கண்களில்
தெரிகிறாய் கணமெலாம்.

ஆத்மசாந்திக் கிரியை நிகழ்வுகள் 23 - 03 - 1991 சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அழைக்கப்படுகின்றனர்.

— குடும்பத்தினர்

65, குமாரசாமி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். [C/5876]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சையில் சித்தி அடைந்தும் சம்பள உயர்வு தாமதம்

## பட்டப்பின் கல்வி டிப்ளோமா ஆசிரியர் கவலை

அச்சுவேலி, மார்ச் 22

பட்டப்பின் கல்வி டிப்ளோமா பரீட்சையில் சித்தி அடைந்த ஆசிரியர்கள் அதற்குரிய சம்பளத் திட்டத்தைப் பெற்றுக்கொள்வதிலும், வருடாந்த சம்பள உயர்ச்சி வினைத்திறன் தடை தாட்டலைப் பூர்த்தி செய்வதிலும் தாமதம் ஏற்பட்டு வருகின்றது.

கோட்டக்கல்வி அலுவலகங்கள் பரீட்சை முடிவை உறுதிப்படுத்துவதில் தடங்கல் ஏற்படுவதனால்தான் தாமதம் ஏற்படுவதாகக் கூறப்படுகின்றது

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறியை பூர்த்தி செய்த பட்டதாரி ஆசிரியர்கள் பலருக்கு இது வரை வருடாந்தச் சம்பள உயர்ச்சியோ, பட்டப்பின் கல்வி டிப்ளோமா சம்பளத் திட்டமோ வழங்கப்படவில்லை எனக் கூறப்படுகின்றது. [இ-11]

## உதயன்

### போரும் பொருளாதாரமும்

நாட்டின் முன்னேற்றத்துக்குத் தேவையான பொருளாதாரக் கொள்கைகளை வகுக்கவும், திட்டங்களை அமுல் செய்து உரியபெறுபேறுகளைப் பெறுவதனை ஊக்குவிக்கவும், கண்காணிக்கவும் ஜனாதிபதி தலைமையில் அமைச்சரவை உபகுழு ஒன்று இயங்க உள்ளது.

பொருளியல் விவகாரங்களைப் பல அமைச்சர்கள் சேர்ந்து வழி நடத்த இருப்பது இதுவே முதற்தவையாகும். இவ்வாறான உபகுழு ஒன்று உருவாக்கப்பட்டிருப்பதும் இதுவே முதல் முறை என அறிவிக்கப்படுகிறது.

இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர், இதுவரை காலமும் நாட்டின் பொருளாதாரத் திட்டங்கள் ஆட்சியில் உள்ள கட்சியின் அடிப்படைக் கொள்கைகளுக்கு ஏற்ப, நிதி அமைச்சர் மூலமே ஆற்றுப்படுத்தப்பட்டு, செயலாக்கப்பட்டு வருகின்றன. அந்தப் பொறுப்பு இப்போது ஐந்தாறு அமைச்சர்களிடம் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

இதற்கான காரணம் என்ன? தனி அமைச்சர் ஒருவர் அல்லது ஜனாதிபதி ஒருவர் தனித்து பொருளாதாரத்தை நேராக்குவது கடினம் என்ற அளவுக்கு, அது சீர்குலைந்து போய்விட்டது என்பதையே புதிய மாற்று வழி, கூட்டு முயற்சி வழி எடுத்துக் காட்டுகிறது எனலாம்.

இலங்கையைப் புதிய கைத்தொழில் தேசமாக்க [என். ஐ. சி.] வேண்டும் என்ற பிரேமதாசாவின் ஆசை ஓர் அங்குலம் தானும் முன்னோக்கித் தவழ்வதற்கும் இயலாத அளவுக்கு, நாட்டின் பொருளியல் நிலை கீழ் நோக்கிச் சரிந்துள்ளது.

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், இலங்கைக்கு உதவும் நாடுகள் குழு, ஜப்பான் ஏனைய மேலை நாடுகள் என்பவற்றிடம் கையேந்தி, இரந்து கடன் பெற்றே காலத்தைப் போக்கும் வெட்கக்கேடான நிலையில் நாடு இருக்கிறது.

இத்தகைய கீழ் நிலையிலும், போர், பொருளாதாரத்தில் ஏற்படுத்தும் தாக்கங்களை உணர்ந்து கொள்ளாமல் வடக்கு-கிழக்கில் அரசாங்கம் இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்கிறது. நாளாந்தம் கோடிக்கணக்கான ரூபா பணத்தை, வெடிப்பொருளாக்கி, ஆயுதமாக்கி விரயம் செய்கிறது.

விடுதலைப் புலிகளுடன் நடத்தும் போரில் படைகள் வெல்லப் போவதில்லை என்பது அரச படை அதிகாரிகளே வெளிப்படையாகக் கூறிய ஒன்று. மற்றும் அரசியல், இராணுவத்துறை அவதானிகளும் அதனையே திரும்பத் திரும்பக் கூறுகிறார்கள்.

அவ்வாறிருக்க, இந்த யுத்தத்தை அரசாங்கம் அர்த்தமில்லாமல் தொடர்ந்து நடத்துகிறது. நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலைத்து, சிதறடித்துக் கொண்டிருக்கிறது.

யுத்தத்தை நிறுத்தாமல், வீண் பண விரயத்தைத் தவிர்க்காமல், பத்து அமைச்சர்கள் என்ன, பெரும் பொருளியல் நிபுணர்களின் பல மூளைகள் கூட்டுச் சேர்ந்தால் கூட, இலங்கையின் பொருளாதாரத்தை நிமிர்த்தி எழுப்ப முடியாது! கடன் வாங்கிக் காலம் கடத்துவதாகத்தான் இருக்கும். அதனை உணர்ந்து அரசாங்கம் தக்கவாறு செயற்படுவது எப்போது?

## நேரடி விசாரணை நடத்த மன்னிப்புச்சபை விருப்பம்

கொழும்பு, மார்ச் 22

இலங்கையில் இடம்பெற்று வருவதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் பற்றி சர்வதேச மன்னிப்புச் சபையின் குழு ஒன்று நேர்முக விசாரணை நடத்த அனுமதியளிக்கும்படி கொழும்பு அரசுக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

அண்மையில் தொழிற்சங்கக் கூட்டம் ஒன்றில் கலந்து கொள்ள கொழும்பு வந்திருந்த சர்வதேச மன்னிப்புச் சபையின் இரண்டு உறுப்பினர்கள் இலங்கை அரசிடம் இக்கோரிக்கையை நேரில் சமர்ப்பித்தனர்.

மன்னிப்புச் சபையின் இக்கோரிக்கை சாதகமான முறையில் பரிசீலனை செய்யப்பட்டு வருவதாக ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கூன் புதன்கிழமை இடம்பெற்ற வாராந்தச் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். [இ-எ]

## இலங்கையருக்கு நஷ்டஈடு

கொழும்பு, மார்ச் 22

வளைகுடா போர் காரணமாக தொழில் இழந்து தாயகம் திரும்பிய சுமார் 75 ஆயிரம் இலங்கையருக்கு நஷ்டஈடு வழங்க சர்வதேச தொழில் ஸ்தாபனமும், ஐக்கிய நாடுகள் சபையும் கொள்கையளவில் உடன்பட்டுள்ளன என்று கொழும்பு அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. [இ-எ]

## டீஸல் கடத்தலை தடுக்க தமிழக அரசு நடவடிக்கை

இந்தியர்களின் மீன்பிடிப் படகுகளில் இருந்து நடுக்கடலில் வைத்து இலங்கைக்கு டீஸல் மற்றும் பெற்றோலை கடத்தும் நடவடிக்கைகளைத் தடுக்கும் திட்டம் ஒன்றை தமிழக அரசு செயற்படுத்துகிறதாம்.

இதன்படி- கோட்டைப்பட்டினத்தில் 138 மீன்பிடிப் படகுகளுக்கும் ஜனதாப் பட்டினத்தில் 432 படகுகளுக்கும் தலா நூறு லீற்றர் வீதம் டீஸல் வழங்கப்படும் என்றும் தொழிலுக்குச் சென்றுவிட்டு கரைக்குத் திரும்பியவுடன் டீஸல் செலவு குறித்து ஒவ்வொரு படகின் உரிமையாளரும் கணக்குக் காட்டவேண்டும் என்றும் தமிழக அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

## அன்னை பூபதி நினைவாக போட்டி

அன்னை பூபதி ஞாபகார்த்த பொது அறிவுப் போட்டி ஒன்று விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தினரால் அடுத்த மாதம் 12 ஆம் திகதி கொத்தணிமட்டத்தில் நடத்தப்படவுள்ளது.

15 வயதுக்குக் கீழ்ப்பட்டோர் 15 வயதுக்கு மேற்பட்டோர் என இரு பிரிவுகளிலும் நடக்கும் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

வன்னி, மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் இந்தப் போட்டிகள் நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவு தினம் ஏப்ரல் 5 ஆம் திகதியாகும். [உ-5]

### களப்பலியான...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கனகாஞ்சன் - புத்தூர்]

★ ஆர்னோல்ட் [கிருஷ்ணபிள்ளை சுதன் - ஹொறவப் பொத்தானை]

★ மொறிஸ் [சண்முகம் தவராஜா - வரணி]

★ டெலின் [வே ஞானரூபன் - புளியங்கூடல், ஊர்காவற்றுறை]

★ சிவசங்கர் [இராஜேந்திரகுமார் - நாவாந்துறை]

★ பெண் போராளி சுதா (தேவராஜா மேரி குயினா - வல்வெட்டித்துறை]

★ பெண் போராளி சுலா [ராஜரட்ணம் வசந்தி - திருகோணமலை

### சிலாவத்துறையில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தாக்குதல்கள் குறித்து விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் உத்தியோகபூர்வ செய்தி எதனையும் வெளியிடவில்லை. விவரமான பத்திரிகைக் குறிப்பு இன்று காலை வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்த மோதலில் வீரமரணமடைந்த வேங்கைகள் பதினேழு பேரின் புகழுடம்புகள் நேற்று யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்டன. [illegible]

## குருபூசை

தவயோகி யோகசுவாமிகளின் குருபூசை எதிர்வரும் 26ஆம் திகதி காலை 9-00 மணிக்கு கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெறும் [இ]

### 43 கப்பல்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கடற்படையினர் கைது செய்திருக்கலாம் என்று நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

இவர்களது நிலை குறித்து பூநகரி உதவி அரச அதிபர், கிளிநொச்சி அரச அதிபருக்கு அறிவித்துள்ளார்.

அரச அதிபர் கொழும்பு கடற்படை தலைமையகத்துடன் தொடர்பு கொண்டுள்ளார் என்று தெரியவந்தது. [illegible]

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 22

திரு. இ. சங்கரப்பிள்ளை எழுதிய ''போதிப் பிள்ளையார் ஆற்றுப்படை'' நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அச்சுவேலி தோப்புப் போதிப் பிள்ளையார் கோவில் வசந்த மண்டபத்தில் நடைபெறும்.

## புலமைப் பரீட்சைக்கு 40 ஆயிரம் மாணவர்

இம்மாதம் 30ஆம் திகதி நடைபெறவிருக்கும் விசேட ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சையை சுமார் 40 ஆயிரம்மாணவர்கள் எடுக்க உள்ளனர்என்று பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன

வவுனியா மாவட்டத்தில் 14 நிலையங்களில் சுமார் 2 ஆயிரம் பேர் இப்பரீட்சையை எடுக்கின்றனர்.

வடமாகாணத்தின் ஏனைய மாவட்டங்களில் சுமார் 150 நிலையங்களில் இப்பரீட்சை நடத்தப்படும். [இ-எ]

## கஷ்ட நிவாரண அலவன்ஸ் இல்லை

யாழ்ப்பாணம், மார்ச்22

யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதி ஊழியருக்குகஷ்ட நிவாரண அலவன்ஸ் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. [இ]

## பரீட்சை வடக்கில் நடக்குமா? திரிசங்கு நிலையில் மாணவர்

யாழ்ப்பாணம், மார்ச் 22

1991 ஆம் ஆண்டு வெளிவாரிப் பட்டப் படிப்பு மாணவர்களுக்கான கலை முதற் தேர்வுப் பரீட்சை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடக்குமா?

இது குறித்து மேற்படி மாணவர்கள் குழப்பமடைந்துள்ளனர்.

பேராதனைப் பல்கலைக் கழகத்தினால் வெளிவாரிப் பட்டப் படிப்பு மாணவர்களுக்காக நடத்தப்படும் இந்தப் பரீட்சை அடுத்த மாதம் 15 ஆம் திகதி கொழும்பு, கண்டி ஆகிய பரீட்சை நிலையங்களில் நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஏப்ரலில் மேற்படி பரீட்சை யாழ்ப்பாணத்திலும் நடைபெற்றது. இந்தமுறை அங்கிருந்து பரீட்சை வினாத்தாள்களை எடுத்து வந்து யாழ்ப்பாணத்தில் பரீட்சையை நடத்த பாதுகாப்பின்மையைக் காரணம் காட்டி மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறிய வருகிறது.

பரீட்சைக்கு நாள் நெருங்கிக் கொண்டிருக்கும் வேளையில் இதுவரை பரீட்சை குறித்து தீர்க்கமான முடிவு எதுவும் அறிவிக்கப்படாததால் மாணவர்கள் குழப்பமடைந்துள்ளனர்.

தென் பகுதிக்குச் சென்று பரீட்சைக்குத் தோற்றுவதா? அல்லது இறுதி நேரத்தில் பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடக்கும் என்னும் அறிவிப்பு வருமா? என்ற நிலையில் இந்த மாணவர்கள் இருந்து வருகின்றனர். [இ-5]

## இலவச பாடநூல்

வடமராட்சிக் கோட்டக் கல்விப் பிரிவைச் சேர்ந்த 83 பாடசாலைகளுக்கான இலவசப் பாட நூல்கள் வடமராட்சிக் கோட்டப் பணிமனைக்கு வந்து சேர்ந்துள்ளன.

இவை எட்டுக் கொத்தணிகளுக்கும் பிரித்துக் கொடுக்கப்படுகின்றன. [இ-118]

## அடிக்கடி இடம் பெறும் ஷெல் வீச்சால் அச்சம்

காங்கேசன்துறை, மார்ச் 22

பலாலியில் இருந்தும், காங்கேசன்துறையில் இருந்தும் அடிக்கடி ஷெல் வீச்சும், துப்பாக்கிப் பிரயோகமும் இடம்பெறுவதால் பொதுமக்கள் அங்கு செல்ல அஞ்சுகின்றனர்.

விவசாயிகள் தமது பயிர்களுக்கு நீர் இறைக்கவும், பயிர்களை பண்படுத்தவும் விவசாய உற்பத்திப் பொருள்களை எடுத்து வந்து சந்தைப்படுத்தவும் தயங்குகின்றனர். [இ-68]

## போலந்துக்கான கடனில் 70 சதவீதம் தள்ளுபடி

வாஷிங்டன், மார்ச் 22

போலந்து நாட்டுக்கு வழங்கிய கடனில் 70 சத வீதத்தைத் தள்ளுபடி செய்வது என்று அமெரிக்க அரசு நேற்று அறிவித்தது.

ஜனநாயக அரசியலில் போலந்து அரசு காட்டிவரும் உண்மையான ஆர்வத்தை மதிக்கும் ஒரு நடவடிக்கையாக இந்தக் கடன் தள்ளுபடி இடம்பெறுவதாக ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தெரிவித்தார்.

போலந்து ஜனாதிபதி வாஷிங்டனில் திரு. புஷ்ஷுடன் தமது நாட்டின் பொருளாதார நெருக்கடி பற்றி பேச்சுக்கள் நடத்தினார்.

கம்யூனிஸ ஆட்சியைக் கைவிட்ட பின்னர் ஜனநாயக அரசியல் பாதையில் போலந்து காட்டிவரும் அக்கறைபற்றி திரு. புஷ்ஷிடம் போலந்து ஜனாதிபதி விவரித்தார்.

போலந்து வழங்கிய கடன் முழுவதையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் போலந்து ஜனாதிபதி திரு. புஷ்ஷைக் கோரினார். [இ-எ]

## ஈரான் நிராகரிப்பு

ஈராக்கில் உள்நாட்டுக் கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஆயுதம் வழங்கி உதவுவதாக பக்தாத் அரசு தெரிவித்த குற்றச்சாட்டை ஈரான் அரசு நிராகரித்து உள்ளது.

## நமீபியா சுதந்திரதினம்

வின்கொக், மார்ச் 22

நமீபியா தனது முதலாவது சுதந்திர தின ஆண்டு நிறைவை இன்று கொண்டாடப்படுகிறது.

75 ஆண்டுகளாக தென் ஆபிரிக்க ஆட்சிக்கு உட்பட்டிருந்த நமீபியா கடந்த ஆண்டு மார்ச் 22 ஆம் திகதி சுதந்திரம் பெற்றது.

நமீபியாவின் விடுதலைப் போராட்டம் 23 ஆண்டுகள் நீடித்தது. [இ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரவு முழுதும் ஷெல் வீச்சு

தென்மராட்சி, மார்ச் 22

நேற்று முன்தினம் இரவு முழுவதும் ஆனையிறவு இராணுவத்தினர் 'பரா' வெளிச்சக் குண்டுகளை ஏவியபடி, ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

சங்கத்தார்வயல், இயக்கச்சி, புதுக்காடு பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்தன. [ஒ-117]

## இரத்ததானம்

யாழ்ப்பாணம், மார்ச் 22

கொக்குவில் இந்துக் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி, வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் மகாவித்தியாலயம் ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்கள் நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் இரத்ததானம் செய்தனர்.

கடந்த இரு தினங்களாக பொதுமக்கள் பலரும் கூட இரத்ததானம் செய்து வருகின்றனர். [உ-15]

## சிலுவை உலா உரை நாடகம்

குருநகர், மார்ச் 22

பாஸ்கா தினத்தை முன்னிட்டு யாழ். திருமறைக் கலாமன்றம் ''சிலுவை உலா'' என்னும் பக்தி-இசை-உரை நாடகத்தை இன்று முதல் தொடர்ந்து 3 நாட்களுக்கு மன்ற அரங்கில் மேடையேற்ற இருக்கிறது.

தினசரி மாலை 6. 45 மணிக்கு மேடையேறும் இந் நாடகத்திற்கு பிரவேசம் இலவசம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [ஒ-51]

## உஷா திருமணம்

புதுடில்லி, மார்ச் 22

இந்திய விளையாட்டு வீராங்கனை பி. ரி. உஷா இராணுவத்தைச் சேர்ந்த ஸ்ரீநிவாசன் என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். அதிகாரி மட்டத்தில் இராணுவத்தில் பணிபுரியும் திரு. ஸ்ரீநிவாசன் கபாடி விளையாட்டு வீரர் ஆவார். [அ]

# செய்திச் சாரம்

## பீஷ்மனும் களத்தில்!

சென்னை, மார்ச் 22

தமிழ்நாடு மாநில ஆளுநராக இருக்கும் திரு. பீஷ்மன் நாராயண சிங் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பீஹார் மாநிலத்தில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளராக போட்டியிட விருப்பதாக சென்னைச் செய்திகள் தெரிவித்தன.

இதற்காக விரைவில் அவர் ஆளுநர் பதவியை ராஜினாமாசச் செய்வார் என்று கூறப்படுகிறது. [ஒ-எ]

## ஈராக்கில் 15,000 பேர் பலி

பக்தாத், மார்ச் 22

ஈராக்கின் புனித நகர்களில் ஒன்றான நஜா நகரின் அரசுப் படைகளுக்கும் கிளர்ச்சிக்காரர்களுக்கும் இடையே நடந்த சண்டையில் சுமார் 15 ஆயிரம் பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசுப்படைகள் ஏவுகணைகள், நேபாம் குண்டுகளை பாவித்தன என்றும் அதனால் தான் உயிரிழப்புகள் அதிகமாகின என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஒ-எ]

## அதிசயக் குழந்தை

சென்னை, மார்ச் 22

தமிழ்நாட்டில் ஆறுகால்களுடன் ஒரு குழந்தை பிறந்திருக்கிறது.

சென்னை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள அக் குழந்தையின் நான்கு கால்களை சத்திர சிகிச்சை மூலம் அகற்ற டாக்டர்கள் முடிவு செய்திருப்பதாக சென்னைச் செய்திகள் கூறுகின்றன. [ஒ-எ]

## வீரமரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 22

கடந்த புதனன்று காலை பத்து மணியளவில் ஆனையிறவு இராணுவ முகாம் பகுதியில் இடம் பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான சுடர் [சின்னப்புராசா இராஜமோகன்- கிளிநொச்சி] வீரமரணமடைந்தார்.

★ ★

திருமலை மாவட்டம் மூதூர்ப் பகுதியில் கடந்த புதனன்று நண்பகல் 12. 45 மணியளவில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் இடம் பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான லெப்டினன்ட் பிரதீப் வீரமரணமடைந்தார். [உ]

## நினைவஞ்சலி கூட்டம்

கொழும்புத்துறை, மார்ச் 22

வீரவேங்கை ஏகாம்பரநாதன் - உதயகுமாரின் (இர்மானி) 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் இன்று மாலை 7 மணிக்கு கொழும்புத்துறை துறையடிச் சந்தியில் நடைபெறும். [உ-30]

## ரூ. 5000 வரை வங்கியில் பெறலாம்

யாழ்ப்பாணம்' மார்ச் 22

இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளையில் வாடிக்கையாளர்களின் [நலன் கருதி இன்று [வெள்ளிக்கிழமை முதல் ரூ. 5000 வரை கொடுப்பனவுகள் வழங்கப்பட இருப்பதாக வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. [இ]

## யுத்த நிறுத்த முயற்சி எதுவும் இல்லையாம்

கொழும்பு, மார்ச் 22

வடக்கு - கிழக்கு சண்டையில் யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டுவர அரசாங்கம் முயற்சிக்கிறது என்ற செய்தியில் உண்மையில்லை.

ஜனாதிபதியின் வெளியுறவு விவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கூன் முன்கண்ட தகவலை புதன் நடைபெற்ற வாராந்திர செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார். [இ-எ]

## பருத்தித்துறை வங்கியில் நிவாரணம்

பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளையில் நாளை சனிக்கிழமை சுயமுயற்சி உற்பத்தித் திறன் நிவாரணம் ரூபா நாலாயிரம் வழங்கப்பட உள்ளது.

புலோலி மேற்கு, வல்லிபுரம், வல்வெட்டித்துறை வடக்கு, தொண்டமானாறு, வல்வெட்டித்துறை தெற்கு, துன்னாலை வடக்கு ஆகிய கிராமசேவையாளர்கள் பிரிவுகளைச் சேர்ந்த 704 குடும்பங்களுக்கு நாளை இந்த நிவாரணம் வழங்கப்படும். [இ-118]

## இடமாற்றம் குறித்து கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 22

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் ஊழியர்களை தென்பகுதிக்கு இடமாற்றம் செய்யும் நடவடிக்கை குறித்து ஆராய இன்று வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு கலந்துரையாடல் ஒன்று கோண்டாவிலில் நடைபெற இருக்கிறது.

தமிழ்பேசும் போக்குவரத்து ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவிருக்கிறது. [இ-3]

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 22

பருத்தித்துறை— வியாபாரிமூலை கலைமணி சனசமூக நிலையத்தினால் நடத்தப்படும் கலைமணி அறிவியல் மன்ற கருத்தரங்கு, இன்று பிற்பகல் [illegible] [ஒ-5]

# புலிகளுடன் பேசும் வாய்ப்பு இன்னும் இருக்கிறதாம்

கொழும்பு, மார்ச் 22

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுக்கள் நடத்தும் வாய்ப்பு இன்னமும் இருக்கிறது என்று இலங்கை அரசு வலியுறுத்திக் கூறி இருப்பதாக இந்திய வானொலி நேற்று அறிவித்தது.

ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் கடந்த புதன் செய்தியாளர் மாநாட்டில் பேசுகையில் இக் கருத்தை வெளியிட்டார் என்றும் இந்திய வானொலிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்த அரசு இன்னமும் தயாராக இருப்பதாக திரு. பிரட்மன் அப்போது கூறியிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## தொலைபேசி இணைப்பில் மோசடி:

# யாழ். வாசிகள் நால்வர் தமிழகத்தில் கைது!

சென்னை, மார்ச் 22

தொலைபேசி இணைப்பைச் சட்டவிரோதமாகப் பயன்படுத்தி வெளிநாடுகளுடன் தொடர்பு கொண்டு தொலைபேசியில் பேசியதாக இலங்கையைச் சேர்ந்த 4 பேரும் சென்னையைச் சேர்ந்த ஒருவரும் தமிழகப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைதான இலங்கையர் நால்வரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும்— தங்களை அகதிகளாக அவர்கள் பதிவு செய்து கொண்டவர்கள் என்றும் பொலிஸ் ஆணையாளர் டபிள்யு. எஸ். தேவாரம் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மாதவரம் அருகே தொலைபேசிக் கம்பியுடன் கருவி ஒன்றை இணைத்து அவர்கள் பிரான்ஸ், கனடா, ஜேர்மன் உட்பட பல நாடுகளுடன் தொலைபேசி மூலம் பேசி வந்தமை விசாரணையின் போது வெளிவந்தாகவும் திரு. தேவாரம் சொன்னார். [ஒ எ]

# ஊர்காவற்றுறை வங்கிக்கு அதிகாரிகள் குழு செல்லும்

ஊர்காவற்றுறை மக்கள் வங்கிக் கிளையில் உள்ள ஆவணங்களை எடுத்துவர வங்கி அதிகாரிகள் குழுவொன்று இவ்வாரம் அங்கு செல்லவிருக்கிறது.

இராணுவ நடவடிக்கையின் பின்னர் அங்கு வங்கி அதிகாரிகள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டிருந்தது தெரிந்ததே.

தற்சமயம் கூட்டுப்படை தலைமையகம் அனுமதி வழங்கியுள்ளதையடுத்து அதிகாரிகள் அங்கு செல்லவிருக்கின்றனர். [உ-3]

# புதிய ஓய்வூதியருக்கு இலவச உலர் உணவு

சுய விருப்பத்தின் பேரில் கடந்த வருட இறுதியில் ஓய்வு பெற்றவர்களுக்கு இலவச உலர்உணவு நிவாரணம் வழங்கப்படவிருக்கிறது.

ஓய்வூதியப் பத்திரங்களை அனுப்பியும் ஓய்வூதியம் பெற முடியாதிருப்பவர்களுக்கே — 10 வருடங்கள் முதல் 20 வருடங்கள் சேவை புரிந்தவர்களுக்கே — இந்த நிவாரணம் வழங்கப்பட இருக்கிறது.

ஓய்வூதியம் கையில் கிடைக்கப் பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டிய இந்தப் புதிய ஓய்வூதியரை வருமானமில்லாதவர்களாகக் கணித்து அவர்களுக்கு நிவாரணம் வழங்குமாறு உதவி அரசாங்கஅதிபர்களை செயலக புனர்வாழ்வுப் பிரிவு பணித்துள்ளது.

கடந்த இரண்டரை மாதங்களாக இவர்கள் பணம் கொடுத்து உணவுப் பொருள்களைப் பெற்று வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. [அ-3]


## மங்கள திறப்பு விழா

23-03-91

இறக்குமதி செய்யப்பட்ட

லோங்ஸ், சேட், சேட்டிங், சூட்டிங்

மங்கள வைபவங்களுக்கேற்ற

● கூறைச் சேலைகள் ● காஞ்சிபுரம்

● பட்டு வேட்டி சால்வைகளுக்கு

புகழ்பெற்ற ஸ்தாபனம்

★ சுகுனாஸ் ★

பிடைவை மாளிகை

20, அருச்சுனா வீதி, (ஸ்ரான்லி வீதி)

யாழ்ப்பாணம். [15926]


## மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் மார்ச் மாதம் 29 ஆம் திகதி ஆரம்பமாகி ஏப்ரல் 15 ஆம் திகதி முடிவடையும் வருடாந்த மகோற்சவ நாட்களில் தற்காலிக கடைகளை அமைப்பதற்கு இடம் குத்தகைக்கு எடுக்க விரும்பும் வியாபாரிகள் இம் மாதம் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு ஆலயத்தில் கடைகளுக்குப் பொறுப்பாயிருப்பவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

ஆலய தர்மகர்த்தா சபை

[16174]

## மரண அறிவித்தல்

### சூ. மோசேஸ்

பலாலி தெற்கு வயாவிளானைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் சூ மோசேஸ் அவர்கள் 10 - 3 - 91 அன்று காலமானார். இவர் சூசை மரியம்மாவின் அன்பு மகனும், அன்னமரியம்மாவின் அன்புக் கணவரும், பிரான்ஸிலுள்ள ஸ்ரனிஸ்லாஸ், கொன்ஸ்ரன்ஸ்ரைன், சந்திரிக்கா, றிச்சாட், டோணாஸ், டெலாசி [கனடா], மனோகரன், இந்திரா, மஞ்சுளா, சுபத்திரா, காலஞ்சென்ற பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரான்ஸ் லங்கேஸ்வரன், பாலச்சந்திரன், மேரி அஞ்சலா, கருணைநாதன் ஆகியோரின் மாமனாரும். றேகா, றொனால்ட், றொன்சன், கபிலன், இந்து, றேகன், வான்மதி ஆகியோரின் அன்புப் பேரனும், தேவசகாயம், இக்கினேஸ்சம்மாவின் மருமகனும், மேரியோசப், நல்லம்மா, காலஞ்சென்ற பிலிப் திரவியம், சவரிமுத்து ஆகியோரின் சகோதரரும், தங்கமலர், அன்னரத்தினம், அன்ன சின்ராஜா, செல்வராஜா, அன்னமலர், நேசமணி ஆகியோரின் மைத்துனரும், இன்பராணியின் ஞானத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 23-3-91 சனிக்கிழமை மாலை 5 மணியளவில் வயாவிளான் அமல உற்பவ மாதா சேமக்காலையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

மு. கு:- பருத்தித்துறை 2ம் குறுக்குவீதியில் உள்ள அவர்களின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

தகவல்:

மருமகன் க. கருணைநாதன்

2 ஆம் குறுக்குத் தெரு,

பருத்தித்துறை. [16383]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 22 - 03 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org